# இன்றுகரும்புலிகள்தினம்எங்கும் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 89 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 21 இதழ் 140
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 05 07 1993

(யாழ்ப்பாணம்)
தமது அளப்பரிய தற்கொடைகள் மூலம் எதிரிகளை திகைப்பில் ஆழ்த்தியும் உலகை வியப்பில் ஆழ்த்தியும் வீரச்சாவடைந்த கரும்புலிகள் நாள் இன்று தமிழ் ஈழம் எங்கும் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படுகின்றது.
(4-ம்பக்கம் பார்க்க)

## இலங்கை திரும்ப அகதிகள் மறுப்பு

(சென்னை)
தமிழகத்திலுள்ள இலங்கை தமிழ் அகதிகள் பலர் இலங்கை திரும்ப மறுத்துள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.
கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களே பெருமளவினர் இவ்வாறு மறுப்பு தெரி
(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் புலிகளை தடுக்க படையினருக்கு நவீன ஆயுதம்

(சென்னை)
தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தடுக்கும் நோக்கமாக, தமிழகப் பொலிசாருக்கு ஏ.கே-47 ரகத் துப்பாக்கிகள் விரைவில் வழங்கப்படவுள்ளதாம்.
(4-ம் பக்கம் பார்க்க)

## ● புலிகளின் அதிரடியில்

# சப்-இன்ஸ்பெக்டர் உட்பட ஐந்துபொலிஸார்மன்னாரில்பலி

## வாகனமும் முற்றாக சேதம்

(மன்னார்)

**மன்னாரில் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ரோந்து சென்ற பொலிஸ் வாகனம் மீது விடுதலைப் புலிகள் நேற்று மேற்கொண்ட மின்னல்வேக அதிரடித் தாக்குதலில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் உட்பட 5 பொலிசார் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். வாகனமும் பலத்த சேதமடைந்தது.**

மன்னாரிலிருந்து பேசாலை நோக்கிச்சென்றபொலிசாரின் 'றூப்பர்' வாகனம் மீது தாரன்குண்டு என்ற இடத்தில் வைத்து விடுதலைப்புலிகள் மேற்படி அதிரடித் தாக்குதலை நடாத்தினர்.

நேற்று முற்பகல் 11-20மணியளவில் நடைபெற்ற இவ் அதிவேக அதிரடித் தாக்குதல் சுமார் ஒன்றரை நிமிடம் மட்டுமே நீடித்தது.

இவ் அதிரடித் தாக்குதலின் போது 'றூப்பர்' வாகனம் முற்றாக சேதமடைந்ததாகத் தெரியவருகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

## ★ இணைப்பு விவகாரம்:

## வாக்கெடுப்பை தீர்மானிக்க தெரிவுக்குழு நாளை கூடுகிறது

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைந்திருக்கவேண்டுமா? இல்லையா? என்பது குறித்துச் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானிப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழு நாளை செவ்வாய்க்கிழமை கூடுகிறது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான 'பொதுசன ஐக்கிய முன்னணி' தெரிவுக் குழுவிலிருந்து விலகுவதாகக் கடந்த வாரம் அறிவித்தொரு நிலையில் தெரிவுக் குழு நாளை கூடுவதாக அதன் தலைவர் திரு. மங்கள
(4-ம் பக்கம் பார்க்க)

## அமைதியை ஏற்படுத்துவதற்கு அரசு — புலிகள் முன்வரவேண்டும்

(லண்டன்)
இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் பொதுமக்களின் நன்மையைக் கருத்திற் கொண்டு தேவையான அமைதி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று அண்மையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய 'சர்வதேச சமாதானக்குழு' கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் அனைத்துத் தரப்பினரும் அமைதியைத் தேடவேண்டும். அமைதிக்காக உழைக்க வேண்டும். பொதுமக்களின் நலனை மனதிற் கொண்டு இரு பகுதியின
4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் விமானத்தள விஸ்தரிப்பு; தமிழ் எம்.பி.க்கள் எதிர்ப்பு

(கொழும்பு)
வவுனியாவில் உள்ள விமானப்படைத் தளத்தை விரிவுபடுத்த இலங்கை அரசு முயற்சி செய்துவருவதை உடனடியாகக் கைவிடவேண்டும் என்று தமிழ் எம்.பிக்கள் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவைக் கேட்டுள்ளார்கள்.

சுமார் 200 ஏக்கர் நிலத்தில் வாழும் 145 தமிழ்க் குடும்பங்களை வெளியேற்றுவதைத் தமிழர்கள் பொறுக்கமாட்டார்கள் என்றும், விமானப் படைத் தள விஸ்தரிப்பை உடனடியாக அரசு கைவிடவேண்டும் என்றும் அவர்கள் அரசை வற்புறுத்தி உள்ளனர்.

இதற்கிடையில் விமானத் தள விஸ்தரிப்பு வேலையில் படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (ம-சி)

## உணவு முத்திரையை அரசு நிறுத்தும்?

(லண்டன்)
உலக வங்கியின் ஆணைப்படி ஜனசவிய திட்டம் இலவச உணவு முத்திரைகள் போன்ற வற்றை அரசாங்கம் நிறுத்துவதற்கு யோசனை செய்கின்றது என்று சுதந்திரக்கட்சி செயலாளர் தர்மசிறிசேன நாயக்கா பி.பி.ஸிக்கு தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த ஜி.எம். பிரேமச்சந்திரா கூறுகை
(4-ம் பக்கம் பார்க்க)

## இனப் பிரச்னைக்கு சிறிமா கட்சியும் தீர்வை கூறவில்லை

(கொழும்பு)
சிறிமா தலைமையிலான பொது ஐக்கிய முன்னணி, சிறுபான்மையினரின் பிரச்னைக்கு ஒரு தீர்வை இதுவரை முன்வைத்ததா? என்று சஞ்சீவ் பெரேரா என்பவர் பி. ஐ. யின் சந்தேசியாவில் கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் சுயரூபங்களை, மாகாண சபைத் தேர்தலுக்குப் பின்புதான் காணக்கூடியதாக உள்ளது
(4-ம் பக்கம் பார்க்க)

## நாட்டில் பிரிவினையை அரசே தூண்டுகிறது

(லண்டன்)
இலங்கை அரசாங்கம் சகல இன மக்களும் ஒற்றுமையாக வாழக்கூடிய அரசியலமைப்பை உருவாக்கி, நாடாளுமன்றத்தில் கூடிய வாக்குகளால் நிறைவேற்றுவதற்குப் பதிலாக நாட்டு மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபட்டுள்ளதென்று பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு' செல்லத்துரை என்ற தமிழர் ஒருவர் அரசாங்கத்தை குற்றம் சாட்டி கடிதம் எழுதியிருக்கின்றார்.

சமஷ்டி அரசியல் அமைப்பு பற்றியும் தமது கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார் என்றும் 'சந்தேசிய' மேலும்தெரிவித்துள்ளது. (ம-சி)

## பொருளாதாரப் பிரச்னையால் அரசுக்கு பெரும் நெருக்கடி

(லண்டன்)
ஐக்கிய தேசியக் கட்சி அரசு பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்குள் சிக்கியுள்ளது என்று பி.பி.ஸி. சிங்களச் சேவை குறிப்பிட்டுள்ளது.

அச்செய்தி மேலும் கூறுகையில்: அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு யூலை மாதம் 1ம் திகதி முதல் வழங்கவிருந்த 40 வீத சம்பள உயர்வை அரசு பின்போட்டதிலிருந்தே அரசு பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது தென்படுகிறது.

பாதுகாப்பு, புனரமைப்பு வேலைகளுக்கு அதிக பணம் தேவைப்படுவதால் இந்தச் சம்பள உயர்வைக் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதென்றும், அந்தச் சம்பள உயர்வு நிலுவைப்பணத்துடன் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 1ம் திகதி வழங்கப்படுமென்றும் அரசு அறிவித்துள்ளது என்றார். (ம-சி)

## வரி விளம்பரம்

### பாலாஜி புத்தகசாலை

புத்தம் புதிய டிசைன்களில் கண்ணுக்கு மெருகூட்டும் நவீன ரகப் பிறந்த நாள் வாழ்த்து மடல்கள் விற்பனையாகின்றன. 15% தள்ளுபடி. உங்கள் தெரிவுக்கு இன்றே முந்துங்கள். 16 பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (ஏ 3229)

— பெயர் மாற்றம் —
யாழ் நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் G.V. Kanesalinkam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.
G.V. Kanesalinkam,
298, காங்கேசன்துறை வீதி,
— யாழ்ப்பாணம். —

(சி 252)


## இன்று

(வட்டுக்கோட்டை)

அராலி வடக்கு மயிலிட்டிப் புலம் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் கடந்த 26ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இன்று திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் நாளை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (139)

## கிளைக் குழுத் தேர்தல்

(பருத்தித்துறை)

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கக் கிளைக் குழுக்களின் தேர்தல்கள் எதிர்வரும் 10ம் திகதி சகல கிளைகளிலும் நடைபெறுமென, வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு மு. கனகசபாபதி தெரிவித்துள்ளார். (52)

## விதை நெல்

(பண்டத்தரிப்பு)

உடுவில் கமநல சேவை நிலைய பிரதேசத்தை சேர்ந்த விவசாயிகள் காலபோக விதை நெல்லை பெறுவதற்கு இம்மாதம் 10ம் திகதிக்கு முன்னர் 200 ரூபா முற்பணம் செலுத்தி தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு காலபோக நெல் விதைப்பதற்கேற்ற நல்லின விதை நெல் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (72-சி)

## தொழிற்திணைக்கள சான்றிதழ்கள்

(யாழ்ப்பாணம்)

1987—89 காலப் பகுதியில் யாழ்ப்பாணம் மாவட்ட தொழில் திணைக்களத்தால் ஊர்காவற்றுறை, காரைநகர், சங்குவேலி, உடுப்பிட்டி ஆகிய தொகுதிகளில் நடாத்தப்பட்ட தொழில் பயிற்சி நிலையங்களில் பயிற்சியை முடித்துக் கொண்டவர்களுக்கான சான்றிதழ்கள் கொழும்பு தலைமைக் காரியாலயத்திலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன.

மேற்படி காலப் பகுதிகளில் பயிற்சியை முடித்து இதுவரை சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் யாழ்ப்பாணம் மாவட்ட தொழில் அலுவலகத்தில் சமுகமளித்து சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று உதவித் தொழில் ஆணையாளர் திரு. க. சிவப்பிரகாசம் அறிவித்துள்ளார். (வி)

## நூல்நிலையம்

(பண்டத்தரிப்பு)

சாளிப்பாயிலுள்ள 'தியாக சிலம்' சிறுவர் பூங்காவிலுள்ள மண்டபத்தில் இம்மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் நூல்நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. (7ச)

## இராசி பலன்

05-07-1993

திங்கட்கிழமை

(தமிழுக்கு ஆனி 21)

சதுர்த்தி முழுவதும், உத்தராடம் மு. இ. 10-42 வரை மரணயோகம், இராகுகாலம் காலை 7-27 முதல் 8-57 வரை. சுபநேரம் காலை 11-57 முதல் 1-27 வரை.

மேஷம்: விசித்திரமான பேச்சு, அறிவாற்றல், பண வரவு.

இடபம்: கவனப்பேதி, தாழ்வு மனப்பான்மை, தோல்வி.

மிதுனம்: திருமண தொகை, நிதானக் குறைவு, அலைச்சல்.

கடகம்: அதிகாரமிக்க பதவி, காரிய வெற்றி, புதிய சாதனை.

சிங்கம்: உடல் நலம், உறவினர் உதவி, தொழில் சிறப்பு.

கன்னி: மூட்டத்தனம், வைத்திய செலவு, கண்டிப்பு.

துலாம்: விபரீத எண்ணம், மனைவி பகை, தர்க்கம்.

விருச்சிகம்: மன அடக்கம், ஞானிகள் தரிசனம், உபாயம்.

தனுசு: பயங்களுக்குள்ளாகுதல், தடுமாற்றம் போதனை.

மகரம்: காரிய சித்தி, சாமர்த்தியம், அதிக வருவாய்.

கும்பம்: அகங்காரம், இனசனம் பகை, தப்பான சிந்தனை.

மீனம்: சுய நல நோக்கு, தெய்வவழிபாடு, குடும்பசுகம்.

ஜோதிடர்.

## சல்மான் ருஷ்டி எழுதிய சாத்தானின் கவிதைகள் நூல் சாதனை படைக்கிறது!

(லண்டன்)

முஸ்லிம் மக்கள் மத்தியில் பெரும் சர்ச்சையை எழுப்பிய "சாத்தானின் கவிதைகள்" என்னும் நூலே தற்போது உலகில் கூடுதலாக விற்பனை செய்யப்படுவதாக லண்டன் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

மேற்படி நூலின் விற்பனை மூலம் அதை எழுதிய திரு. சல்மான் ருஷ்டி இதுவரை ஆறு கோடிக்கு மேலான அமெரிக்க டொலர்களை சம்பாதித்து ஒரு கோடீஸ்வரராகிவிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

திரு. ருஷ்டியின் "சாத்தானின் கவிதைகள்" நூல் பல மொழிகளில் தற்போது மொழி பெயர்க்கப்பட்டு அச்சிடப்பட்டு விற்பனையாவதாகவும், ஆங்கில மொழியில் மட்டும் இதுவரை 10 லட்சத்துக்கும் மேற்பட்ட பிரதிகள் விற்பனையாகிவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

இந்தியாவில் பிறந்தவரான திரு. ருஷ்டி பிரிட்டனில் பிரஜாஉரிமை பெற்று தற்போது பிரிட்டனில் அஞ்ஞாதவாசம் செய்து வருகின்றார்.

இவர் எழுதிய "சாத்தானின் கவிதைகள்" என்ற நூல் முஸ்லிம் மதத்தை இழிவுபடுத்துவதாக உள்ளது எனக் கூறி ஈரானின் மதத்தலைவர் அயத்துல்லா கொமேனி இவருக்கு மரணதண்டனையும் விதித்தார்.

திரு ருஷ்டியைக் கொலை செய்வதற்காக ஈரானிய உளவுப் பிரிவு முயற்சி மேற்கொண்டு வருவதனால் இவருக்கு பிரிட்டிஷ் அரசு பாதுகாப்பு வழங்கி வருகின்றது.

இவரின் பாதுகாப்புக்காக பிரிட்டிஷ் அரசு இதுவரை பல லட்சம் ஸ்டேர்லிங் பவுண்களை செலவு செய்துவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. — வி

## "மாணவர்கள் — ஆசிரியர் சொற்படி நடந்தால் நல்ல எதிர்காலம் பிறக்கும்"

### கல்விப் பணிப்பாளர் அறிவுரை

(நெல்லியடி)

"படிக்க முடியாதவர்கள் என்று எவரும் இங்கு இல்லை. பரீட்சையில் சித்தியடைவது கஷ்டமில்லை, ஆசிரியர்களின் சொற்படி நடந்தால் மாணவர்களுக்கு நல்ல எதிர்காலம் பிறக்கும்" இவ்வாறு யாழ் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திருமதி எஸ். குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

ஒரு கிராமத்தின் எதிர்பார்ப்புகள் ஒரு கல்லூரியையே சார்ந்திருக்கும். மாணவர்களுக்கு முழுமையான கலாசாரம், மொழி, இனப்பற்று, தெய்வப் பற்று இருப்பது அவசியம். தற்பொழுது யாழ் மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகம். இங்கு பணிபுரிந்த பல ஆசிரிய பெருந்தகைகள் கொழும்பிற்கு இடமாற்றம் பெற்று ஓடிவிட்டனர். அங்கு நின்று கொண்டு யாழ்ப்பாணம் வருவதற்கு அஞ்சுகின்றனர்.

வடமராட்சி கிழக்கிலுள்ள நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் நூற்றி எண்பத்தைந்து மாணவர்கள் படிக்கிறார்கள். ஆசிரியர் பற்றாக்குறை உண்டு. மருதங்கேணி, செம்பியன்பற்று போன்ற பகுதிகளிலும் இதே நிலைப்பாடுதான். இவற்றை நீக்குவதற்கு வெளிமாவட்டங்களில் சேவை செய்யாத திருமணமாகாத ஆசிரியர்களை அண்மையில் தேர்ந்தெடுத்தோம். இதனால் இப்பற்றாக்குறை ஓரளவு நீங்கும்.

தற்பொழுது வடபகுதியில் தனியார் ரியூட்டரிகள் அதிகம். இதனால் பாடசாலையில் ஒன்று, ரியூட்டரியில் ஒன்று கற்பிப்பதனால் மாணவர்கள் படிக்க முடிவதில்லை. கூரிமையாக இருப்பவர்களிடம் மனிதப் பண்பை உருவாக்குவது கல்வியே. ஆசிரியர் வகுப்புக்குச் செல்லும்போது தயாராகவும், கவர்ச்சியாகவும் செல்லவேண்டும். இதனால் மாணவர்கள் ஆசிரியர்கள் தொடர்பு அதிகரிக்கும். மாணவர்கள் தன்னை வளர்த்த தாயையும், கல்வி ஊட்டிய குருவையும் மறக்கக்கூடாது என்றும் கூறினார். (160-வி)

## செய்திச்சிதறல்

### பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடத்திற்கென யாழ். கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட முறைசாராக் கல்விப் பிரிவு வளர்ந்தோர் தொழில்திறன் கல்வி அபிவிருத்தித் திட்ட பயிற்சி நெறிக்கான பரீட்சைகள் இம்மாதம் பத்தாம் திகதி முதல் ஆரம்பமாகி ஒருவாரகாலத்திற்கு நடைபெறும். இப்பயிற்சி நெறியை மேற்கொண்டவர்கள் தமது பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அவ்வப்பாடசாலை அதிபர்களிடமிருந்து இன்று 5 திகதியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுள்ளது. (158)

### பாடசாலை தளபாடங்கள்

(திருநெல்வேலி)

வாதுவ கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான தளபாடங்கள், இம்முறை மிகவும் வசதியற்ற நிலையில் இருக்கும் பாடசாலைகளுக்கே விநியோகிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (157)

### அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

இணுவில் கிழக்கில் சுமார் 60 குடும்பங்கள் தண்ணீர் பெறுவதற்காக அமைந்திருக்கும் குழாய் கிணற்றுக்கு சர்வோதய மருதனமடக் கிளையினர் சன சமூக நிலையத்தினுடாக கையால் இறைக்கும் கருவி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

### வழிப்பறி

(நெல்லியடி)

சயிக்கிளில் வந்த அச்சுவேலியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவரை வழிமறித்த திருடர் கோஷ்டி, அவரிடமிருந்த பணத்தைப் பறித்துச் சென்றுள்ளது. இச்சம்பவம் அண்மையில் வல்லைச் சந்தியில் இடம் பெற்றது. (16)

### பெரியபுராணம் முற்றோதல்

(கொழும்புத்துறை)

பெரியபுராணம் முற்றோதல் நிகழ்ச்சி தினசரி பி. ப. 4-30 முதல் 5-30 மணிவரை யாழ். கந்தர்மடம் வேதாந்த மடம் குமாரசாமி வீதியிலுள்ள சிவகுருநாதர் குரு பீடத்தில் இடம் பெற்று வருகிறது. (154)

### மாணவர் பாதிப்பு

(ஆனைப்பந்தி)

யாழ் நகரில் இயங்கிவரும் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் சித்திரப்பாடத்திற்கான ஆசிரியர் இல்லாமையால் சித்திரப் பாடம் கற்கும் மாணவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக கூறப்படுகின்றது. (101)

### வருடாந்த கூட்டம்

(நெல்லியடி)

துன்னாலை ஆயில்நின்றொல்லை விநாயகர் ஆலய மகா சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம், அண்மையில் ஆலய மண்டபத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ். முருகேசபிள்ளை தலைமையில் நடைபெற்றது. (160)

### நூல் வெளியீட்டுவிழா

(கொழும்புத்துறை)

கைதடி அஷ்டலட்சுமி நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட "பசுவின் கதை" என்ற நூல் சாவகச்சேரி இந்துமன்றச் செயலாளர் க. சிவசங்கரநாதனினால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இவ்வெளியீட்டுவிழா திரு. ஆறுமுகம்கந்தையா தலைமையில் இடம்பெற்றது. (154)

## சயம்பு தின விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலய சயம்பு தின விழா எதிர்வரும் 9-ந் திகதி வெள்ளிக்கிழமை யாழ். ரகுநாதஞ் சனசபா மண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. அரு

(4-ம் பக்கம் பார்க்க)


## வேலை வாய்ப்பு வெற்றிடம்

பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்து
தொழில் வாய்ப்பற்றிருக்கும்
கலை, வர்த்தக முகாமைத்துவ
விஞ்ஞான பட்டதாரிகளிடம் இருந்து
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன,
சுயவிபரங்களுடனான விண்ணப்பங்கள் உங்கள் பகுதி
மாணவர் அமைப்பு கோட்ட செயலகங்களில்
15-07-93க்கு முன்னராக ஒப்படைக்கவும்.

பொறுப்பாளர்,
விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு,
தமிழீழம்.

(ஏ-3231)

### மணிவாக்கு

எது வெல்கிறதோ அது சத்தியம். சத்தியம் ஒரு போதும் தோற்பதில்லை.
— ஸ்ரீ ஓங்காரிஜி

## நமது நோக்கு

### அகதிகளுக்கு அழுத்தமா?

இலங்கைத் தமிழ அகதிகளை இந்திய அரசு திருப்பி அனுப்பும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பமாகப்போகின்றது.

இனக்கலவரங்கள் உச்ச நிலை அடைந்தபோது, வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பலர், உயிரைக் காப்பாற்றத் தமிழகத் திற்குச் சென்றார்கள்.

மனித உரிமை மீறல்கள் எல்லை கடந்திருந்தவேளை, இராணுவத்தினரின் கொடுமைகளுக்கு அஞ்சிப் பலர் அகதியாக அக்கரை அடைந்தனர்.

நிரந்தரமாகத் தங்கி விடும் நோக்கம் இல்லை. இங்கு அரசியல்தீர்வு ஏற்பட்டு அமைதி திரும்பியதும் நிச்சயம் தமது இருப்பிடங்களுக்குவந்து சேருவார்கள்.

ஆனால் தீர்வுத்திட்டம் எதுவும் முன்வைக்கப் படாத நிலையில், அகதிகளை இங்கு அனுப்பி வைக்க எடுக்கப்படும் தீர்மானம் வரவேற்கப்படக் கூடியதல்ல.

இராணுவ சுற்றிவளைப்புகளும், தேடுதல் நடவடிக்கைகளும், கைது செய்யப்படுவோர் விசாரணையின்றித் தடுத்து வைக்கப் படுவதாகவும் செய்திகள் வருகின்றன.

உதாரணமாக கொழும்பில் தமிழர்கள் கைதொகையின்றிக் கைது செய்யப்படும் நிகழ்ச்சி சாதாரண நிகழ்ச்சியாகி விட்டது.

இதைவிட மன்னார், திருகோணமலை போன்ற இடங்களில் நடைபெறும் புனர்வாழ்வு நடவடிக்கை கள்இனப்பாகுபாடு இன்றி நடைபெறுகிறதா?

இதுபற்றிச் சந்தேகங்களும், குறைகளும் சுட்டிக் காட்டப்படுகின்றன. ஆசிய அபிவிருத்தி வங்கி புனர்வாழ்வுக்காகக் கொடுத்த பணத்தில் மன்னார் மாவட்டத்தில் 40 பேருக்கு மீன்பிடி வள்ளங்கள் கொடுக்கப்பட்டன. இவற்றில் ஒன்று கூடத் தமிழருக்குக் கிடைக்கவில்லை.

இது, வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இமானுவல் சில்வா கூறிய குற்றச் சாட்டு.

இத்தகைய பின்னணியில் அகதிகள் திரும்பி வந்து என்ன செய்யப் போகிறார்கள்? அவர்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குச் சென்று வாழ்வைமீண்டும் அமைதியோடு தொடங்க வாய்ப்புண்டா?

எனவேதான் — அகதிகளை விரைவாக அனுப்பி வைக்க இந்திய அரசு எடுத்த முடிவு மனிதாபிமானமா?

ஐரோப்பிய நாடுகளிலும் அகதிகளை விரைவாகத் திருப்பி அனுப்ப வேண்டும் என்ற எண்ணம் உருவாக இது வழி வகுக்காதா?

அழுத்தங்களைக்கொடுத்து அகதிகளைத் திருப்பி அனுப்புவதில் அவசரம் காட்டுவதன் அர்த்தமென்ன?

# தமிழீழ போரில் பெரும்பலமாக
# கரும் புலிகள் அணி மாறிவிட்டது!

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 1987-ம் ஆண்டு ஜூலை 5-ம் நாள் உலகையே வியப்பிலாழ்த்திய ஒரு புது அத்தியாயம் எழுதப்பட்ட நாள். வடமராட்சியில் 'ஒப்பரேசன் லிபரேசன்'' என்ற இராணுவ நடவடிக்கை மூலம் வெற்றிக் களிப்பில் ஆழ்ந்திருந்த சிறிலங்கா படைகளுக்கு நல்ல பதிலடி கொடுத்த சாதனைமிக்க நாள்.

நெல்லியடி மகாவித்தியாலயத்தில் முகாமிட்டிருந்த சிங்களப்படை மீது வெடிமருந்து நிரப்பப்பட்ட வண்டியை ஓட்டிச் சென்று எதிரி முகாமைத் தகர்த்தெறிந்து வீரசாதனை படைத்தான் கரும்புலி கப்டன் மில்லர்.

**என். கே. ரி.**

இந்த வீரத்திருநாளை விடுதலைப் புலிகள் இயக்கம் கரும்புலிகள் நாளாக பிரகடனம் செய்திருப்பது பொருத்தமான ஒன்றே. கப்டன் மில்லர் ஆரம்பித்து வைத்த கரும்புலித் தாக்குதல் மூலம் இன்று வரை தமிழீழ விடுதலைப் போராட்டம் பல வெற்றிப் படிகளைத் தாண்டியுள்ளது.

இத்தாக்குதலுக்குப் பின்னர் வடமராட்சிக் கடலில் நின்ற அபிதா என்ற கட்டளைக் கப்பல் மீது 4-5-90-ல் கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் ஆகிய கரும்புலிகள் வெடிமருந்துகளுடன் சென்று தாக்குதல் நடத்தினர். இதே கடலில் வைத்து 10-7-90-ல் எடித்தாரா என்னும் கப்பல் மீது மேஜர் காந்தருபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ் ஆகிய கரும்புலிகள் தாக்குதல் நடத்திச் சாதனை படைத்து வீரச்சாவு அடைந்தனர்.

மாங்குளம் இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் தொடுத்த தாக்குதலை மேலும் வெற்றியடையச் செய்வதற்காக 23-11-1990-ல் லெப். கேணல் போர்க் வெடிமருந்து நிரப்பப்பட்ட வாகனத்தில் முகாமிற்குள் சென்று சிங்களப் படைகளைச் சிதறடித்து வெற்றிவாகை சூடினார். இதேபோல மன்னார் சிலாபத்துறை இராணுவ முகாம் மீதான தாக்குதலில் 19-3-91-ல் கரும்புலி மேஜர் டம்போ வெடிமருந்துவாகனத்தை ஓட்டிச் சென்று படையினருக்குப் பலத்த சேதத்தை ஏற்படுத்தினார்.

கரும்புலிகள் களம் புகுவதற்கு பல நாட்களின் முன்னரேயே தங்களது சாவைத் தெரிந்து கொண்டு விடுகிறார்கள். அடுத்த நிமிடத்தில் சாகப்போகிறேன் என்ற உண்மையைத் தெரிந்து கொண்டு தான் கரும்புலிகள் வெடிமருந்தைத் தங்களுடன் கொண்டு செல்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இடம்பெற்ற ஒவ்வொரு கரும்புலித் தாக்குதலும் விடுதலைப் போராட்டத்தை முன்னேற்றி உந்தித் தள்ள வெற்றியின் பாதையில் நிற்கும் தடைக்கற்களை தகர்த்தெறிந்துள்ளது என்பது தான் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

ஒவ்வொரு கரும்புலிகளும் போராயுதங்களுடன் வெடிமருந்தைச் சுமந்து கொண்டு அணுகுண்டை விட அதிகளவு ஆற்றல் வாய்ந்த ஆன்ம உறுதியுடன் எதிரி இலக்கு மீது பாய்ந்து தன்னுடன் சேர்த்து எதிரிகளையும் அழித்து மாபெரும் தியாகம் புரிகின்றனர்.

[illegible] கொடூரம் மிக்கதும் மானிட இனமாக இல்லாததுமான ஒரு பூதம் அல்ல இது. அடிமைப்பட்டுக்கிடக்கும் ஒரு தேசிய இயக்கத்திற்கு உந்து விசையாக விளங்கும் உபாயப் போர் வடிவம் தான் எங்களது கரும்புலிகள் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அதிகார பூர்வ ஏடான விடுதலைப் புலிகள் பத்திரிகையில் தெரிவிக்கப்படுகிறது.

## இன்று கரும்புலிகள் தினம்

இவைகள் ஒரு சாதாரண வீரனால் செய்யமுடியாதவை. இதைச் செய்வதற்கென்றொரு ஆன்மீக பலம் தேவை. தன்னை அழித்துக்கொள்ளத் தயாரான மனோநிலை தேவை. தனது இறுதி நேரத்திலும் கூட பதற்றமின்றி உறுதியுடன் குறி பிசகாது எதிரியைத் தேடி ஓடும் வீரம் தேவை. விரக்தி காரணமாகவோ, முட்டாள்தனமாகவோ தன்னை அழித்துக் கொள்ள முனையும் தற்கொலை முயற்சியை போன்றதல்ல இது. அல்லது எதிரியின் கண் அணுக முடியாத இலக்குகள் என்ற விடயம் கரும்புலிகளது அகராதியில் இல்லை. அதுபோலவே கரும்புலித் தாக்குதலைத் தடுத்து நிறுத்திவிட முடியும் என்ற நம்பிக்கையும் எதிரிகளின் கூடாரத்தில் இருக்க முடியாது. இன்று தமிழீழ விடுதலைப் போராட்டதின் பெரும்பலமாக கரும்புலிகள் அணி மாறிவிட்டது என்றும் அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

# போராட்ட வரலாற்றில் கரும் புலிகளுக்கு தனியிடம்

இன்று கரும்புலிகள் தினம்' ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் அதி உன்னத இடத்தைப் பெற்றுவிட்ட அந்த மாவீரர்கள் தினம்.

போராளிகள் - முகாம்களை தாக்கி, எதிரிகளை அழித்து விட்டு, குறைந்தளவு இழப்போடு எதிரியை அழித்து மடக்கி விரட்டி, ஆயுதங்கள் மீட்டு வருவதோடு தம்முயிரைப் பாதுகாத்து, தப்பி வந்து விடுவதற்கு தனிப்பயிற்சி பெறுகின்றார்கள்.

ஆனால் கரும்புலிகள் அப்படியானவர்களல்ல அவர்கள் தற்கொடைப் போராளிகள். இரும்பு நெஞ்சோடு எதிர்க்கு நெருப்பாகி மரணத்தை எப்போதும் மடியில் கட்டியிருப்பவர்கள்.

இந்தப் போராளிகள் இந்த நிலைக்கு வந்ததின் காரணமென்ன? பின்னணி என்ன?

இலங்கை சுதந்திரமடைய விடுதலை விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர் சேர். பொன். இராமநாதன். அவர் தனது அரசியல்வாழ்க்கையில் எவற்றைக்கண்டார். இனக்குரோத மனப்பான்மையினால் அவர் பின்தள்ளப்பட்டார்.

சிங்களத் தலைவர்கள் சிறைப்பட்டிருந்த வேளை லண்டன் மாநகருக்குச் சென்று தமது ஆளுமையினாலும் அறிவுத் திறமையாலும் ஆங்கில ஆட்சியாளர்களோடு வாதாடி சிங்களத் தலைவர்களின் மீட்புக்கு வழிவகுத்தவர் சேர். பொன். இராமநாதன் அவர் மீண்டும் கொழும்பு திரும்பியதும் அவரைக் குதிரை வண்டியிலே இருத்தி இழுக்கும் குதிரைகளை தாமே இழுத்து வெகுகோலாகலமாக வரவேற்றார்கள்.

ஆனால் சேர். பொன் இராமநாதன் தமது பிற்கால வாழ்க்கையில் தமிழரின் உரிமைகள் பாதுகாப்பற்றவை எனத் தெளிவுபடுத்தியவர்.

அதன் பின்வந்த அரசியல் கட்சிகள் காலம் காலமாக தமிழர் உரிமைகளைப் பற்றி நாடாளுமன்றத்தில் பேசினார்கள். சிங்கள அரசாங்கம் இதை கவனத்தில் எடுக்கவில்லை. பேச்சுவார்த்தைகள் என்று காலம் கடத்துவதும் தமிழர்கள் மேல் வகுப்புக் கலவரங்கள் ஏவிவிடுவதும் அது முடியாமற்போக இராணுவத்தால் அடக்க நவீன ஆயுதங்கள் கொள்முதல் செய்து நடவடிக்கையில் இறங்கிய நேரத்தில் போராட்டம் மூலமே உரிமைகள் வென்றெடுக்கப்பட வேண்டும் என்று இளைஞர்கள் போராளிகளாகி, கரும்புலிகளாகி செயற்படத் தொடங்கினார்கள்.

வேகமாக வளர்ந்து விட்ட இந்த தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று உலகத்திலேயே அதி உன்னத இடத்தைப் பெற்றுவருகின்றது. இந்தப் போராட்ட வரலாற்றிலே கரும்புலிகளுக்கு தனியிடமுண்டு (எஸ் எஸ்)

## கரும்புலிகள் புகழ் பாடுவோம்

பூவான இதயங்கள் புயலாகின — போரில்
புயலாகி கரும்புலிகள் நடைபோட்டனர்
சாவே வாவென்று அணைத்தார்கள் — எங்கள்
சரித்திரத்தில் தூணாகி நின்றார்கள்.

நீரோடும் காற்றோடும் கலந்தார்கள் — எங்கள்
நினைவிலே உணர்வேற்றிச் சென்றார்கள்
பாரெங்கும் புலிவீரம் முழங்கி — எங்கள்
பைந்தமிழினையே உயர்வு செய்தார்.

வீரத்தின் விளைநிலம் எம்நாடு — என
விளங்கிடும் காலமும் இக்காலம்
கரும்புலிகள் வாழும்மெங்கள் திருநாடு — இனிக்
காலமெலாம் இவர்புகழைப் பாடிடுமே.

— அரியாலையூர் கேந்திரன்

## மரண வேள்வியின் மௌன காவியங்கள்!

களத்தினில் ஆடிமெங்கள் கருத்திலே நிலைத்து வென்ற
கரும்புலித்தலைமை பெற்றார்!
நிலத்தினில் வீரதீரம் நிகழ்த்திய தளிர்களென்ற
நெடும்புகழ்ப் பெருமை உற்றார்!

''புன்னைை'' அணிந்தமேனிப் புனிதராய்
ஈழ மண்ணில்
புதுப்புதுச் சண்டை செய்தார்!
மண்ணலம் சுமந்தவீர மறவராய் நமது நெஞ்சில்
மகத்துவக் கவிதை செய்தார்!

வாலிபச் சுகங்களின்றி, வாழ்க்கையில் வசந்தமின்றி;
வாகையைச் சூடி வென்றார்!
வீழினும் ஈழ மண்ணின் விடுதலை நாடி என்றும்
வேங்கையாய்ப் பாடி நின்றார்!

— ஜெ. கி. ஜெயசீலன்

### அமெரிக்க அதிபர்
## அணு ஆயுத சோதனையை நிறுத்துவதாக அறிவிப்பு

(வாஷிங்டன்)

அணு ஆயுத சோதனைகளை நிறுத்திவைக்கப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் அறிவித்துள்ளார். ஏனைய அணுசக்தி நாடுகளையும் இதைப் பின்பற்றுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அமெரிக்கா, அடுத்த ஆண்டு அக்டோபர் வரையிலும் தனது ஆயுத சோதனைகளை நடாத்தாது என்று திரு. கிளிண்டன் வாராந்தர வானொலி உரையில் கூறினார்.

இந்தத் தடைபற்றி ஏனைய நாடுகளும் ஒத்துக்கொண்டால், அமெரிக்கா ஏனைய அணுசக்தி நாடுகளுடன் ஒரு விரிவான ஒரு சோதனை தடை பற்றி பேச்சுவார்த்தை நடத்தும் என்றும் மற்றைய நாடுகளும் அணுஆயுத உற்பத்தியில் இறங்கும் ஊக்கத்தையும் இது குறைக்கும் என்றும் அவர் கூறினார். (கே-ரி)

★ இந்திய மத்திய அரசு

# தமிழக அரசைக் கலைப்பதற்கு தி.மு.க. உதவியை நாடுகிறது

(சென்னை)

தமிழ்நாட்டில் அ.தி.மு.க. தலைமையிலான அரசைக் கலைப்பதற்காக மத்திய அரசு சார்பில் தி.மு.க.விடம் தூது அனுப்பப்பட்டது என்று மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தங்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்தால் தமிழக அரசைக் கலைப்பதாக மத்திய அரசு சார்பில் தூது வந்தது என்றும் புதுடில்லியிலும் சென்னையிலும் பிரபலமானவருள்ள ஒரு காங்கிரஸ் முக்கிய பிரமுகர் இவ்வாறு தூது வந்ததாகவும் திரு கருணாநிதி குறிப்பிட்டார்.

மத்திய அரசின் சொற்படி நடக்க தி.மு.க. தயாராக இல்லை. என்று தி.மு.க உறுதியாக தெரிவித்து விட்டது என்றும் அவர் கூறினார்.

தி.மு.க.வின் இந்த நிலைப் பாட்டிற்கு ஜெயலலிதா நன்றியுள்ளவராக இருக்க வேண்டும் என்றும் தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி ஏற்படுத்துவதற்காக சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்பளிக்க நாங்கள் தயாராக இல்லை வட இந்தியாவைச் சார்ந்தவர்கள் தமிழகத்தை ஆட்சி செய்வதை அனுமதிப்பதை விட ஜெயலலிதாவையே ஆட்சி செய்யவிட்டு நாம் எதிர்க் கட்சியாகக்கூட இருக்கலாம் என்றும் திரு. கருணாநிதி கூறினார். (தி-சி)

## ஓய்வூதியக் கோவைகள் யாழ். வந்தன

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியம் பெற்றுக் கொள்வது சம்பந்தமான விண்ணப்பங்களைக் கொழும்பு ஓய்வூதியப் பணிமனைக்கு அனுப்பி வைத்த நூற்றுக்கும் அதிகமானவர்களது கோவைகள் கொழும்பிலிருந்து யாழ். செயலகத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

கொழும்பு ஓய்வூதியத் திணைக்களத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட இக் கோவைகள் சம்பந்தமான கடமைகளை மேற்கொள்ளத்தக்க யாழ். செயலகத்தில் மிகச்சொற்ப உத்தியோகத்தர்களே நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் இக்கடமைகளை மேற்கொள்ள மேலதிகமாக இன்னும் பல உத்தியோகத்தர்கள் நியமிக்கப் பட்டால் மட்டுமே இவைகளுக்கான கடமைகளை விரைவாகச் செய்ய முடியும் என்றும் இல்லாத வரையில் இவ்ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதில் இன்னும்கால தாமதத்தை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்நிலை உள்ளது என்றும் கூறப்படுகிறது. (161-சி)

★ ஜம்மு - காஷ்மீரில்

## வெளிநாட்டு முஸ்லிம் தீவிரவாதிகள் இந்தியப் படையுடன் மோதல்

(மணிலா)

இந்தியாவுக்கு எதிராக தனி நாடு கோரும் காஷ்மீர் போராளிகளுடன், மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளிலுள்ள முஸ்லிம் போராளிகளும் இணைந்து கொண்டு இந்திய இராணுவத்திற்கு எதிராக போரிடத் தொடங்கியுள்ளதாக 'ஏ.எப்.பி.' செய்தி தெரிவிக்கின்றது.

ஆப்கானிஸ்தானின் இஸ்லாமிய அரசு ஒன்றை நிறுவ நடந்த போரில் கலந்து கொண்ட போராளிகள் ஆப்கான் போரில் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து காஷ்மீருக்குள் வந்திருப்பதாக கூறப்படுகிறது.

ஆப்கானில் அமெரிக்கா கொடுத்த ஆயுதங்களை பயன்படுத்திய அந்தப் போராளிகள் தற்போது இத்தகைய நவீன ஆயுதங்களுடன் காஷ்மீருக்குள் எடுத்துவந்திருப்பதால், இப்போராளிகளை ஒடுக்குவது இந்தியப் படைக்கு கடினமான பணி என்று கணிக்கப்படுகிறது என்றும் அச்செய்தி தெரிவித்தது. (ம-சி)

**அமைதியை**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ம் சமாதான முயற்சிகளில் இறங்கவேண்டுமென்றும் இக்குழு ஆலோசனை தெரிவித்துள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணப் பகுதிக்கு விஜயம் செய்துள்ள இக்குழுவினர் அங்குள்ள மக்களின் குறைகளையும் பிரச்னைகளையும் நேரடியாகத்தெரிந்து கொண்டு அதன் அடிப்படையில் தாம் தயாரித்த அறிக்கையொன்றை ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவிடம் சமர்ப்பித்துள்ளனர். (ரி-சி)

## தமிழகத்தில் 23 மாவட்டங்களில் மகளிர் பொலிஸ் படை

(சென்னை)

தமிழகத்தில் உள்ள 23 மாவட்டங்களில் முற்றிலும் பெண்களைக்கொண்ட காவல் நிலையங்களை ஏற்படுத்த மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

இவைதவிர சென்னையில் மேலதிகமாக இரண்டு மகளிர் காவல் நிலையங்களும், கோயம் புத்தூர், மதுரை, வேலூர் ஆகிய இடங்களில் தலா ஒரு காவல் நிலையம் அமைக்கப்பட உள்ளன.

இந்த நிலையங்கள் அனைத்தும் மகளிர் காவல்துறை ஆய்வாளர் ஒருவரின் தலைமையின்கீழ் செயல்படும்.

இவற்றில் 32 துணைப்பெண் ஆய்வாளர்களும், 40 தலைமைக் காவலர்களும், 290 காவலர்களும் நியமிக்கப்படுவார்கள். (இ-சி)

**தமிழகத்தில்**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய அரசின் உள்துறை பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ராஜேஸ் பைலட் அண்மையில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

பஞ்சாப், காஷ்மீர் தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களே இவ்வாறு தமிழகப் பொலிஸாருக்கு வழங்கப்படவுள்ளதாம்.

விடுதலைப் புலிகள் விவகாரத்தைப் பொறுத்தவரையில் மத்திய, மாநில அரசுகள் கூட்டாகச் செயற்படவேண்டியதன் அவசியம் பற்றியும் மேற்படி பேச்சுவார்த்தையின் போது ஆராயப்பட்டதாகவும் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன. (க-சி)

## பல பயணிகளிடம் அமைச்சர் கொள்ளை

(லண்டன்)

இலங்கை அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவர் பயண முகவர் நிலையம் ஒன்றை நடாத்தி பல லட்சரூபா கொள்ளையடித்துள்ளார் என்று மலேஷியாவில் தங்கியுள்ள நூற்றுக்குமேற்பட்ட இலங்கை பயணிகள் தெரிவித்துள்ளனர்.

பம்பலப்பிட்டியில் இருந்து சென்ற இந்தப் பயணிகளிடம் ஒருவருக்கு 65.000 ரூபா தொடக்கம் 80 000 ரூபா வரை அந்த முகவர் பெற்றுக் கொண்டு வேலைவாய்ப்புப் பத்திரம் வழங்குவதாக ஒத்துக் கொண்டார்

ஆனால் இது வரை எமக்கு வேலை வழங்கவில்லை'' என்றும் அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

இது குறித்துசம்பந்தப்பட்டவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளனர். (ம-சி)

## புலிகள் தப்பிச் செல்ல காவல்துறை உதவுகிறது

(சென்னை)

தமிழகத்தில் அண்மைக் காலங்களில் விடுதலைப் புலிகள் காவல் துறையினரிடமிருந்து தப்பிச் செல்வதைப் பார்க்கும் போது, உள்ளூர் காவல்துறையினர் விடுதலைப் புலிகளுக்கு முன் கூட்டியே இது குறித்துத் தகவல் அளிக்கின்றனர் என்ற சந்தேகத்தைத் தோற்றுவிக்கிறது.

மாநில பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் என்.எஸ். சந்திரபோஸ் நேற்று திருச்சியில் பத்திரிகையாளரிடம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியல் சட்டம் 356 பிரிவைப் பயன்படுத்தி, தமிழக அரசைக் கலைப்பதைத் தமது கட்சி ஆதரிக்காது. சட்டம், ஒழுங்கு சீராக இல்லாத பிற மாநிலங்களில் இச் சட்டத்தைப் பயன்படுத்திய பின்பே இதைத் தமிழகத்தில் பிரயோசனப்படுத்தவேண்டும் என்றார். (இ-சி)

**இன்று கரும் புலிகள்**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் ஈழத்தின் முதலாவது கரும்புலி கப்டன் மில்லர் வீரச்சாவடைந்த ஜூலை 5-ம் திகதியை கரும்புலிகள் நாளாக விடுதலைப்புலிகள் பிரகடனப் படுத்தியுள்ளனர்.

இன்று கரும்புலிகள் தினத்தை முழுமையாகக் கொண்டாடுவதற்கு தமிழ் ஈழம் தன்னைத்தயார்படுத்தி வருகின்றது.

தமிழ் ஈழத்தின் மூலைமுடுக்கெல்லாம் சிவப்பு மஞ்சள் கொடிகள் பதாகைகள் என்பன கட்டப்பட்டுள்ளதுடன் தமிழீழம் எங்கும் கரும் புலிகளை நினைவுகூரும் வகையில் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன.

இச்சுவரொட்டிகளில் கரும் புலிகளின் தியாகத்தை வெளிப்படுத்தும் கருத்தோவியங்களும் வாசகங்களும் காணப்படுகின்றன.

முக்கிய இடங்களில் நினைவு பந்தல்கள் அமைக்கப்பட்டதுடன் வாசனங்களில் பதாகைகளும் ஓவியங்களும் கரும் புலிகளை நினைவு கூரும் வகையில் காணப்படுகின்றன.

கரும்புலிகள் தினத்தை யொட்டி தமிழீழப்பகுதி எங்கும் சிரமதான வேலைகள் நடைபெற்று வருகின்றது. வடமராட்சி, வலிகாமம் மேற்கு, கிழக்கு போன்ற பகுதிகளில் இவ் வேலைகள் சிறப்பாக மேற்கொள்ளப் பட்டுவருகின்றது.

மேலும் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் மேற்கு, கிழக்குப் பகுதிகளில் கரும்புலிகள் நினைவாக பொதுக் கூட்டங்கள் நடாத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. (க-சி)

**இணைப்பு**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முனசிங்க பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கவேண்டிய நிலையில் உள்ளாராம்.

சகல தமிழ்க் கட்சிகளும், பொதுசன ஐக்கிய முன்னணியும் நாளைய கூட்டத்தைப் புறக்கணிப்பதால் சர்வஜன வாக்கெடுப்புக் குறித்த விவகாரத்தில் தெரிவுக் குழு பல சிக்கல்களை எதிர்நோக்குமெனவும் கூறப்படுகிறது. (சி)

## இற்ஷம்பிரு சாம்பியன்

(லண்டன்)

விம்பிள்டன் டெனிஸ் ஆண்களுக்கான ஒற்றையர் இறுதியாட்டத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த இற்ஷம்பிரு என்பவர் சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டார்.

**புலிகளின்**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதில் பொலிசார் தரப்பில் ஏற்பட்டபடை சேதத்தினை கூட்டுப்படைத் தலைமையகமும் நேற்று ஒப்புக்கொண்டது.

இத் தாக்குதலின்போது ரி-56 ரகதுப்பாக்கி-04, ரவைக்கூடுகள்-10, ஏ.கே. ரவைக்கூடு தாங்கி-02, நடுத்தர ரவைகள்-340 ஆகிய ஆயுதங்கள் பொலிசாரிடமிருந்து விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டன.

மேற்படி தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை. (க-சி)

**உணவு**
(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில்; 1992ம் ஆண்டு விலைவாசி உயர்வு அதிகரித்துள்ளது. மா விலைகூட்டப்பட்டுள்ளது. மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. வியாபார மொத்த வரிபனவு வரி, சுங்கவரி மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

இதில் இருந்தே நாம் அறிந்து கொள்வது இன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பெரும்பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது என்பதாகும்'' என்றார். (ம-சி)

## வடமராட்சி கடலில் பீரங்கித் தாக்குதல்

(தாளையடி)

வடமராட்சி கிழக்கு கடற்பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையின் ரோந்து பீரங்கிப்படகுகள் நேற்று முன் தினம் மாலை 6 மணியளவில் உடுத்துறை குடிமனைப் பகுதிகளை நோக்கி சுமார் பதினைந்து நிமிடம் வரை பீரங்கி வேட்டுகளைத்தீர்த்தன. இதனால் மக்கள் பயமடைந்த நிலையில் அயற்கிராமங்களுக்கு இடம் பெயர்ந்தனர். இதனைத் தொடர்ந்து கட்டைக்காடு - வெற்றிலைக்கேணி இராணுவ முகாம்களிலிருந்து துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்கள் கேட்டன.

நேற்றுக்காலை தொடக்கம் நண்பகல்வரை வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிலிருந்து துப்பாக்கி சூட்டுச் சத்தமும் ஷெல்வீச்சும்தொடர்ச்சியாக இடம்பெற்றது. (163-சி)

**இலங்கை திரும்ப**
(1ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளதாகவும் இலங்கையில் தற்போது நிலைமை மோசமடைந்து வருவதையும் அங்கு சர்வஜன வாக்கெடுப்பு நடாத்த தமிழ் மக்களை அரசு பணயமாக்கும் நிலை எழலாமெனவும் அவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் விடயத்தில் இந்திய அரசும் தமிழக அரசும் அவசரம் காட்டக்கூடாதென தமிழகத்திலுள்ள சில உதவி அமைப்புகள் கேட்டுள்ளன.

இதற்கிடையில் தமிழ அகதிகளை அனுப்ப இந்திய அரசு யு.என்.எச்.சி. ஆரிடம் இரு கப்பல்களை கேட்டுள்ளது. (சி)

**இனப் பிரச்னைக்கு**
(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேல்மாகாண சபையில் சோசலிசத்தை ஏற்படுத்தவோடு, முதாலலித்துவத்தையும் இணைத்து நடவடிக்கைகள் எடுக்கப்போவதாககூறியசந்திரிகா குமாரணதுங்காவின் பொதுசன ஐக்கிய முன்னனியின் நடவடிக்கைகள் தற்போது சீராக இல்லை.

சப்பிரகமுவா மாகாண சபை, மத்திய மாகாணசபைகளில் ஏற்பட்ட தோல்விகள் மூலம் எதிர்க் கட்சிகள் மீது மக்கள் வைத்திருக்கும் அபிமானம் நன்கு புலப்படுகிறது. எங்கள் வாக்குகளைப் பெற்று எங்களுக்கு எதிராகச் செயற்படுவது சரியா என்றும் அவர் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-சி)

கிரிக்கெட்

## இந்திய அணிக்கு வரவேற்பு

(சென்னை)

இலங்கை செல்லும் இந்திய கிரிக்கெட் அணிக்கு நேற்று முன் தினம் சென்னையில் வரவேற்பளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இந்தியாவுக்கான இலங்கை தூதர் டாக்டர் நெவில் கனகரத்தின கலந்து கொண்டார். இந்திய அணி இவ்வாரம் இலங்கை வருகிறது. (சி)

**சயம்பு தினம்**
(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வானந்தம் கலந்துகொள்ளவுள்ளார். கல்லூரி நூற்றாண்டு நினைவுப் பேருரையை பேராசிரியர் வே. தர்மரத்தினமும், முன்னாள் அதிபர் செ. பத்மநாதனும் நிகழ்த்துவார்கள்.

—ரீ

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூலை மாதம் 05-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post office, Sri Lanka under Licence Number B/10336/B